(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 5 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, ஜூன் 11, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0007 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங் களின் எண்ணிக்கையையும்,

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச்சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவு களுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறை நிரப்புச் செலவினம் என்பவற் றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0100 / '09

2.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— பெற்றோலிய, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்திய IOC கம்பனி இந்நாட்டில் பெற்றோலிய எண்ணை விநியோகத்தை ஆரம்பித்த திகதி யாது என்பதையும்,

(ii) இந்திய IOC கம்பெனியினால் 2007, 2008 ஆம் ஆண்டுகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெற்றோல் மற்றும் டீசலின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கூறியவாறு பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையிலிருந்து எவ்வளவு வருமானத்தைப் பெற்றுக் கொண்டது என்பதையும்,

(iv) IOC கம்பெனி இலங்கைக்கு பெற்றோல் மற்றும் டீசலை இறக்குமதி செய்ததா என்பதையும்,

(v) அவ்வாறெனின் 2007, 2008 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்யின் அளவு எவ்வளவு என்பதையும்,

(vi) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்கு வரி அறவிடப்பட்டதா என்பதையும்,

(vii) அவ்வாறு வரி அறவிடப்பட்டிருப்பின் நுகர்வோரினால் எண்ணெய் கொள்வனவு செய்யும் வரை அறவிடப்பட்ட வரிகள் என்ன என்பதையும்,

(viii) தலா ஒரு லீற்றர் டீசல், பெற்றோலுக்காக அறவிடப்பட்ட வரித்தொகை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு கம்பெனியிடமிருந்து 2007 மற்றம் 2008 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்டுள்ள மொத்த வரித்தொகை எவ்வளவு என்பதையும்

(ii) நாட்டின் மொத்த எண்ணெய் விற்பனையில் இந்தக் கம்பெனி எத்தனை வீதத்தை விற்பனை செய்கின்றது என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0187 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) "மிஹின் லங்கா" விமான சேவைக்காக 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த விமான சேவைக்கு மேலதிகமாக அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ள மற்றுமொரு விமான சேவை உள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அதன் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா விமான சேவைக்குச் சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை எத்தனை,

(ii) அந்த விமானங்களின் பதிவிலக்கங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) கடந்த வருடத்தில் மிஹின் லங்கா விமான சேவைக்குக் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0252 / '09

4.

கௌரவ அஜித் குமார,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2004 முதல் 2008 வரையிலான காலப்பகுதியில் இந் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கறுவா மற்றும் ஏனைய சிறு ஏற்றுமதி பயிர்களின் அளவு எவ்வளவு,

(ii) அவ்வுற்பத்திகளுள் ஏற்றுமதி செய்யப்பட்டவற்றின் அளவு எவ்வளவு,

(iii) அதன்மூலம் பெற்ற ஏற்றுமதி வருமானம் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காலப்பகுதியில் பயிர்ச் செய்கையாளர்களுக்குப் பசளை மானியம் வழங்கப்பட்டதா,

(ii) ஆமெனில் எவ்வளவு,

(iii) அவ்வாறு வழங்கப்படாவிட்டால் அதன் காரணம் யாது,

(iv) கறுவா மீள் பயிர்ச் செய்கைக்கும் கறுவாவை புதிதாகப் பயிரிடுவதற்கும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியம் யாது,

(v) அதற்காகச் செலவிடப்பட்ட பணம் எவ்வளவு,

(vi) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் கறுவா உற்பத்திக்காக வழங்கப்பட்ட வேறு மானியங்களும் அதற்காகச் செலவிடப்பட்ட பணமும் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2009 ஆம் ஆண்டில் கறுவாவுக்காக அரசாங்கத்தின் மானியப் பொதியின் மூலம் வழங்கப்படவுள்ள மானியங்கள் யாவை,

(ii) தற்பொழுது அம்மானியம் வழங்கப்பட்டுள்ளதா,

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0262 / '09

5.

கௌரவ ஜினதாச கிதுலகொட,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் உரிமையானது உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளாமலும் சட்டபூர்வமற்ற வகையிலும் ஒருசில நபர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பட்ட காணிகள் கையளிக்கப்பட்ட அடிப்படை, கையளிக்கப் பட்டவர்கள் மற்றும் வழங்கப்பட்ட காணியின் அளவு ஆகியவற்றையும்,

(ii) இவ்விதமாக சட்டபூர்வ நடவடிக்கைமுறையின்றி கையளித்த உத்தியோகத் தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0284 / '09

6.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை எல்லா வருடங் களிலும் யூன் 30 ஆம் திகதி அன்று தகைமை பெறும் சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவ்வாறு தகைமை பெற்றவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை,

(iii) 2004, 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வருடங்களில் சமுர்த்தி பெறுநர்களாக இருந்து பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை,

(ii) இவ்வாறு நீக்கப்பட்டது எவ்வடிப்படையில்,

(iii) புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பின் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0008 / '09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் சுற்றுலாத்துறை அமைச்சரால் மேற்கொள்ளப் பட்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கையையும்,

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச் சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவு களுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ,

(ii) அப்பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறைநிரப்புச் செலவினம் என்பவற் றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0101 / '09

8.

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பத்திரண,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச வைத்தியசாலைகளினால் பயன்படுத்துவதற்காக 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த மருந்துக்கள் மற்றும் உபகரணங்களுள் காலம் கடந்தவையென கருதப்பட்டு நீக்கப்பட்டவை எவ்வளவு என்பதையும்,

(iii) அந்நந்த வருடங்களில் அவற்றின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்து மற்றும் உபகரணங்கள் குறிப்பிட்ட தரத்துக்கு ஏற்புடையவையல்ல என கருதப்பட்டு நீக்கப்பட்டவற்றின் அளவு எவ்வளவு என்பதையும்,

(v) அவ்வாறு பாவனையிலிருந்து நீக்கப்பட்ட மருந்துகள் எவை என்பதையும்,

(vi) அந்த மருந்துக்களின் அளவு மற்றும் பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் கூறுவாரா?

(ஆ) (i) பாவனையிலிருந்து நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் மேற்கூறிய மருந்துகள் மற்றும் உபகரணங்களில் எவ்வளவு பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதையும்,

(ii) உரிய தரத்தினைக் கொண்டிராத மருந்துப் பொருட்களை பாவித்தல் மற்றும் கொள்வனவு செய்தலை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0188 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அதிமேதகு ஜனாதிபதியின் செலவுத் தலைப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் இந்தச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் "கடற்றொழில்" தலைப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) □கடற்றொழில்□ செலவுத் தலைப்புக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0253 / '09

10.

கௌரவ அஜித் குமார,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான மாவட்ட அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) மேற்படி ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்தினதும் கீழுள்ள விரிவாக்க அலுவலகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும் ,

(iii) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துக்குரிய பிரதான பயிரினங்கள் யாவையென்பதையும் ,

(iv) விவசாய விரிவாக்க பணிகளுக்கான விரிவாக்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக எவ்வளவென்பதையும் ,

(v) அவர்களுள் கறுவா பயிர்செய்கை விரிவாக்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக எவ்வளவென்பதையும் ,

(vi) மேற்படி விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை வெவ்வேறாக எவ்வளவென்பதையும் ,

(vii) 2008 ஆம் ஆண்டில் மேற்படி விரிவாக்க உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்கு வர்த்தமாணி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதா என்பதையும் ,

(viii) மேற்படி ஆட்சேர்புக்கான பரீட்சைகளை நடாத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி திணைக்களத்துக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள மேலதிக விரிவாக்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) அவர்களது பெயர்கள் மற்றும் சேவைக்காலம் தனித்தனியாக யாவை யென்பதையும் ,

(iii) மேற்படி உத்தியோகத்தர்களை நிரந்தரமாக சேர்த்துக்கொள்வதற்கு எவ்வளவு காலமாகும் என்பதையும் ,

(iv) 2005 அம் ஆண்டில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு திட்டவட்டமான பொறுப்பு மற்றும் கடமைப் பட்டியலொன்று இருக்கின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0285 / '09

11.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கந்தானை, ஹபுகொட 265ஆம் இலக்க முகவரியில் வசித்த திருமதி டொல்பின் எஸ்தர் வென்சியுலஸ் பர்டினென்டிஸ் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்த

வேளையில் 2002.12.24 ஆம் திகதி மரணமடைந்தார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மரணமடைந்தவரின் விதவை ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராக வலது குறைந்தவராகிய ஜீ.ஜே.ரேபியல் பர்டினென்டிஸ் இருந்தாரென்பதையும்,

(ii) மேற்படி உரித்தினை பெற்றுக்கொண்டிருந்த வேளையில் 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் முதல் மேற்படி விதவைக்கான ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதென்பதையும்,

(iii) விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் 38917 இன் கீழ் திருமதி பர்டினென்டிஸின் செலுத்தப்படாத சனவரி, பெப்ருவரி மற்றும் மார்ச்சு மாதங்களுக்கான ஓய்வுதிய சம்பளம், வவுச்சர் இலக்கங்கள் 3522, 9524 மற்றும் 4624 ஆகியவற்றின் கீழ் முறையே 2003.01.03, 2003.02.22 மற்றும் 2003.03.24 ஆகிய திகதிகளில் கந்தான தபாற் கந்தோரின் மூலமாக ஜாஎல பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்,

(iv) ஜாஎல பிரதேச செயலாளரினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கையின் பிரகாரம் பொறுப்பாளராக திருமதி பர்ணா எலிசபெத் பர்டினென்டிஸ் என்பவரை விதந்துரைத்து தேவையான விபரங்கள் உள்ளடங்கலாக இலக்கம் 1-52 வரையிலான பக்கங்களைக் கொண்ட 82/110443 ஆம் இலக்கமுடைய கோப்பினை ஓய்வுதிய திணைக்களத்தின் பணிப்பாளருக்கும் கணக்காளருக்கும் அனுப்பியுள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இது தொடர்பாக ஆராய்ந்து 2003.02.01 ஆம் திகதி முதல் 2004.10.01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான ஓய்வூதியத்தை கணக்கீடு செய்து சம்பந்தப்பட்டவருக்கு ஓய்வூதியத்தை தாமதமின்றி பெற்றுத் தருவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்வாரா?

(ii) ஆமெனில், எப்போது முதல் என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0009 / ' 09

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிஹின் விமானச் சேவையினால் விமானப் பணியாளர் இன்றியும், விமானப் பணியாளர்களுடனும் வாடகைக்கமர்த்தப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) விலை மனுக்கோரல் நடைமுறை மூலமாகவா இவை தெரிவு செய்யப்பட்டன என்பதையும்,

(iii) ஆமெனில், விலை மனுக்கோரலை சமர்ப்பித்திருந்த கம்பனிகளது பெயர்களையும், தெரிவு நடைமுறைகளையும்,

(iv) இதனைத் தீர்மானித்த நபர் யார் என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) விமானப் பணியாளர் இன்றியும், விமானப் பணியாளர்களுடனும் என்ற அடிப்படையில் வாடகைக்கமர்த்தப்பட்ட பொழுது மாதாந்தம் அறவிடப்

பட்ட கட்டணம் எவ்வளவு என்பதையும்,

(ii) இது தொடர்பில் நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்றனவா என்பதையும்,

(iii) கணக்காய்வாளர்களினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இறுதித் தெரிவுக்கான குழுவையும் அதன் விதப்புரைகளையும்,

(iv) இங்கு பணியாற்றுகின்ற பணியாட்தொகுதி உறுப்பினர்களது எண்ணிக்கையையும்,

(v) அவர்களது சம்பள அளவுத்திட்டம் அதனால் கம்பனிக்கு ஏற்படுகின்ற தாக்கம் என்னவென்பதை மாதாந்த அடிப்படையிலும்,

(vi) மிஹின் விமானச் சேவையின் இன்றுவரையிலான கணக்குகளையும்,

(vii) அரசாங்கத்திடமிருந்து மிஹின் விமானச் சேவைக்கு மாற்றப்பட்ட பணம், அவ்வாறு மாற்றிய திகதி ஆகியவற்றையும்,

(viii) எந்த தலைப்பிலிருந்து பணம் மாற்றப்பட்டது என்பதையும், பாராளுமன்றம் ஒப்புதல் அளித்த திகதியையும்,

(ix) ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் மிஹின் எயார் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொண்ட செலவுத்தலைப்புகளையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) மிஹின் எயார் லிமிட்டெட்டின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட, திறைசேரி மற்றும் மிஹின் எயார் பிரதான அதிகாரிகளது பெயர்கள் என்னவென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) பணம் சட்ட ரீதியாக ஒதுக்கப்படவில்லை என்பதையும், எனவே சகல அதிகாரிகளும் பொது நிதியை பிழையாக பயன்படுத்திய குற்றத்திற்கு ஆளாவார்கள் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0102 / '09

13.

கௌரவ ஆர். பீ. ஏ.ரணவீர பத்திரண,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகநெகும கருத்திட்டத்திற்காக 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அநுராதபுர மாவட்டத்திற்காக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டது,

(ii) மேற்படி ஒவ்வோராண்டிலும் ஒதுக்கப்பட்ட பணத்தொகையில் இருந்து செலவிடப்பட்ட பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) அநுராதபுர மாவட்டத்தில் அந்தந்த பிரதேச சபை அல்லது மாநகர சபையின் கட்டுப்பாட்டில் உள்ள வீதிகளின் நீளம் எவ்வளவு,

(ii) மேற்படி ஒவ்வொரு பிராந்திய அதிகாரப் பிரதேசத்திலும் இக் கருத்திட்டத்தின் கீழ் தார் போடப்பட்டோ கொங்கிறீட் போடப்பட்டோ உள்ள வீதிகளின் அளவு மற்றும் சரளைக்கல் போடப்பட்டுள்ள வீதிகளின் அளவு தனித்தனியாக எவ்வளவு,

(iii) இக்கருத்திட்டத்தின் கீழ் தார் போடப்பட்டு அல்லது கொங்கிறீட் போடப்பட்டு உள்ள தூரத்தின் அளவு மொத்த தூரத்தின் அளவில் எத்தனை சதவீதம்

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0192 / ' 09

14.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இந்திய மீனவர்கள் எமது நாட்டுக்குச் சொந்தமான கடற் பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்களென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) எமது நாட்டுக் கடற் பரப்பில் மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு உரிமை இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) மேற்படி மீன்பிடித்தலை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும் ,

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0254 / '09

15.

கௌரவ அஜித் குமார,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது கறுவா பயிரிடப்பட்டுள்ள காணிகளின் அளவும் கறுவா பயிர்ச் செய்கையாளர்களின் எண்ணிக்கையும் எவ்வளவு என்பதை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்,

(ii) அக்கறுவா பயிர்ச் செய்கையாளர்களுக்கிடையே 2 ஏக்கருக்குக் குறைந்த, 2 ஏக்கருக்குக் கூடிய, 5 ஏக்கருக்குக் கூடிய,10 ஏக்கருக்குக் கூடிய மற்றும் 50 ஏக்கருக்குக் கூடிய காணிகள் என்ற வகையில் பயிர்ச் செய்கையாளர்களால் பயிரிடப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(iii) இலங்கையில் கறுவாப்பட்டை உரிப்பவர்கள், கறுவா வர்த்தகர்கள் ஆகியோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் கறுவா ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கையும் அந்நபர்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்களும் யாவை,

(ii) மேற்படி ஏற்றுமதியாளர்களால் கடந்த 5 ஆண்டுகளில் ஏற்றுமதிச் செய்யப்பட்ட கறுவாவின் அளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரையும் பி. ப. 12.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

முதலீட்டுச் சபை (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*2.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*4.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*5.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*6.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*23.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*24.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

25.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

பிரேமதாச கேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

28.

சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

29.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

30.

கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

எதிர்கால உலக ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

தெஹிவளை, கவுதான இஸ்லாமிய கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

கிராமிய ஊழியர்கள் மற்றும் இணைந்த கிராமிய வளங்கள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0096 / '09

1.

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பத்திரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அமைச்சர்களினதும் பணியாளர் குழுவினதும் பாவனைக்காக வாகனங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வாகனங்கள் அவ்வாறு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்டிருப்பின் 2008 ஆம் ஆண்டில் அமைச்சர்களின் பாவனைக்காக எத்தனை வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(ii) அமைச்சர்களின் பணியாளர் குழுவுக்காக எத்தனை வாகனங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(iii) 2008 ஆம் ஆண்டில் அந்த வாகனங்களுக்காக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) அமைச்சர்கள், மற்றும் பணியாளர் குழுவுக்காக 2008 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது எ ன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அதன்படி, இதற்காக வாடகையாக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---